## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.24/2022

### சாட்சியின் சான்றுரை PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ஹேமலதா | வட்டம் | - | |
| க/பெ | - | பிரபாகர் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

19.09.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எதற்காக இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் நான் பணம் கொடுத்துள்ளேன் அதை பெறுவதற்காக போட்டுள்ளேன். யாருக்கு கொடுத்துள்ளேன் என்றால் கோபு என்பவருக்கு பணம் கொடுத்துள்ளேன். கோபு என்பவர் சசிகலாவிற்கு என்ன உறவு என்றால் அவருடைய மகளாவார். எவ்வளவு பணம் கொடுத்துள்ளேன் என்றால் ரூ.30 லட்சம் கொடுத்துள்ளேன். அந்த பணத்தை எவ்வாறு கொடுத்துள்ளேன் என்றால் தனிதனியாக கொடுத்துள்ளேன். ஒவ்வொரு முறையும் எவ்வளவு கொடுத்தேன் என்றால் ரூ.10 லட்சம் 3 முறையாக கொடுத்துள்ளேன். அதன் தேதி மாதம் வருடம் என்ன என்றால் 05.01.2019, 10.01.2019, 25.01.2019 ஆகும். இறந்த கோபு தனே கேட்டாரா அல்லது வேறு ஆள் மூலமாக கேட்டரா என்றால் அவரே தான் கேட்டார். எதற்காக பணம் கேட்டார் என்றால் அவர் அரிசி ஆலையை விரிவுபடுத்துவதற்காக கேட்டார். பிராமிசரி நோட்டு யார் எழுதினார் என்றால் கோபுவே எழுதி அதை நிரப்பி கொண்டுவந்தார். எந்த இடத்தில் எந்த ஊரில் வைத்து பணம் கொடுத்தேன் என்றால் ரெட்டிகுப்பம் என் வீட்டில் வைத்து கொடுத்தோம். பணம் கொடுத்த போது யார் யார் இருந்தார்கள்

என்றால் பிச்சைபிள்ளை, ரவிசங்கர் மற்றும் என் பெற்றோர்கள் இருந்தார்கள். பிராமிசரி நோட்டில் யார் யார் சாட்சி போட்டார்கள் என்றால் பிச்சைபிள்ளையும் ரவிசங்கரும் போட்டார்கள். 3 பிராமிசாரிநோட்டிலும் அவர்களே போட்டார்களா என்றால் ஆம். பணத்தை நான் எவ்வாறு கொடுத்தேன் என்றால் எனக்கு போட்ட நகைகளை அடமானம் வைத்தும் மேலும் எனது தந்தையார் எனக்கு உதவி செய்தார் அந்த பணத்தை வைத்தும் நான் ரூ.30 லட்சத்தை கொடுத்தேன். அடமானம் வைத்ததற்கு ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கோபுவின் வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டதா அல்லது கையில் கொடுக்கப்படட்தா என்றால் கையில் தான் கொடுக்கப்பட்டது. அது எந்தமாதியான பணம் என்றால் ரூ.500 தாளாகும். கோபு எவ்வாறு இறந்தார் என்றால் அவர் மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார். அவர் இறந்தபின்பு நாங்கள் யாரிடம் சென்று பணம்கொடுக்குமாறு கேட்டோம் என்றால் 5ம் பிரதிவாதி மணியிடம் சென்று கேட்டோம். அதற்கு அவர் என்ன சொன்னார் என்றால் பணத்தை கொடுக்கிறேன் என்றார். இறந்த கோபுவிற்கு எவ்வளவு சொத்து இருந்தது என்றால் ரைஸ்மில்லும் வீடும் இருந்தது. அது யார் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. கோபுவின் சொத்து தொடர்பாக பாகப்பிரிவினை வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொன்னது அனைத்தும் தவறு என்றால் சரியல்ல. கோபு வாங்கிய பணத்தை என்னிடம் கொடுத்துவிட்டர் என்றும் நான் தேவையில்லாமல் ஒரு வழக்கு போட்டுள்ளேன் என்றும் அதை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.